


# மதுரை மணி

Madurai Mani Tamil Evening Daily
தினசரி தமிழ் நாளிதழ் ®
ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்




மதுரை பதிப்பு *மணி 55 * ஓசை 92 உள்ளூர் - 02.04.2026 வியாழன் விலை ரூ.4/- பக்கங்கள்-4 Website : http://maduraimaninews.com
Madurai Edition *Vol 55 * Issue 92 வெளியூர் - 03.04.2026 வெள்ளி Price Rs. 4/- Pages -4 Email: maduraimaninews@gmail.com

மரணிக்கும் போது இதை செய்தால் சொர்க்கம்!

மத்திய அரசு நிறுவனத்தில் 667 காலியிடங்கள்!

ரணகளமாகும் சத்தியமூர்த்தி பவன்?

அனல் பறக்கும் தேர்தல் செய்திகள்!

## ‘முடிவை நெருங்குகிறது“ஈரான் போர்” - நாட்டு மக்களுக்கு ட்ரம்ப் உரை!

வாஷிங்டன், ஏப். 02–

டி.சி ஈரானுக்கு எதிரான போரில் அமெரிக்காவின் இலக்குகள் முடிவடையும் தருவாயில் இருப்பதாகவும், அமெரிக்கா வெற்றிக்கு மிக அருகில் இருப்பதாகவும் அதிபர் டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.



ஈரானுக்கு எதிராக அமெரிக்காவும் இஸ்ரேலும் இணைந்து மேற்கொண்ட போர் ஒரு மாதத்தை நிறைவு செய்துள்ள நிலையில், அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் முதல்முறையாக நாட்டு மக்களுக்காக உரை நிகழ்த்தினார். வெள்ளை மாளிகையில் இருந்து 19 நிமிடம் அவர் ஆற்றிய தொலைக்காட்சி உரையில், “ஈரானுக்கு எதிரான போர் முடிவடையும் தருவாயில் உள்ளது. நாங்கள் இதை முடிக்கப் போகிறோம். மிக வேகமாக முடிக்கப் போகிறோம். நாங்கள் இலக்கை நெருங்கிவிட்டோம். ஈரான் ராணுவத்தை நசுக்க வேண்டும், ஈரானிய மதகுருமார்களின் அரசு பிராந்திய ஆயுதக் குழுக்களுக்கு அளிக்கும் ஆதரவை முடிவுக்குக் கொண்டு வர வேண்டும், ஈரான் அணுஆயுதம் பெறுவதை தடுக்க வேண்டும் ஆகிய நோக்கங்களுக்காகவே இந்த போரில் அமெரிக்கா இணைந்தது. இந்த முக்கிய நோக்கங்கள் நிறைவடையும் தருவாயில் உள்ளன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். கடந்த நான்கு வாரங்களில் நமது ஆயுதப் படைகள் போர்க்களத்தில் விரைவான, தீர்க்கமான, மகத்தான வெற்றிகளைப் பெற்றுள்ளன. இதுபோன்ற வெற்றிகளை இதற்கு முன் மிகச் சிலரே கண்டிருக்கிறார்கள். ஈரானில் உள்ள அவர்களின் தலைவர்களில் பெரும்பாலானோர் கொல்லப்பட்டுவிட்டனர். அடுத்த இரண்டு முதல் மூன்று வாரங்களில் அவர்கள் இருக்க வேண்டிய கற்காலத்துக்கே அவர்களை திரும்ப அழைத்துச் செல்லப் போகிறோம். அமெரிக்க பேச்சுவார்த்தையில் ஈரான் தீர்வை எட்டாவிட்டால், அவர்களின் ஒவ்வொரு மின் உற்பத்தி நிலையத்தையும் நாங்கள் தாக்குவோம். எல்லா வாய்ப்புகளும் எங்களிடம் உள்ளன. அவர்களிடம் (ஈரானிடம்) எதுவும் இல்லை. அமெரிக்காவுக்கு ஆதரவாக இருக்கும் அரபு நாடுகள் காயப்படவோ அல்லது தோல்வியடையவோ நான் அனுமதிக்க மாட்டேன்” என தெரிவித்தார்.

## சென்னையில் நடக்க இருந்த பிரதமர் மோடி உடனான கட்சி நிர்வாகிகள் சந்திப்பு ரத்து!

சென்னை, ஏப். 02–

சென்னையில் நாளை மறுநாள் நடக்க இருந்த பிரதமர் மோடி உடனான கட்சி நிர்வாகிகள் சந்திப்பு ரத்து செய்யப்பட்டுள்ளது. பா.ஜ.க. கூட்டணி சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு பிரதமர் மோடி நாளை ஆதரவு திரட்டி பிரசாரம் செய்கிறார். இதற்காக நாளை (03.04.2026)மதியம் 12.35 மணிக்கு டெல்லியில் இருந்து தனி விமானம் மூலம் சென்னை வருகிறார். மாலை 3.25 மணிக்கு சென்னையில் இருந்து ஹெலிகாப்டரில் புதுவை புறப்பட்டு செல்கிறார். 4.15 மணிக்கு புதுவை சென்றடையும் பிரதமர் மோடி அங்கு தேர்தல் பிரசாரத்தில் ஈடுபடுகிறார். பின்னர் மாலை 5.50 மணிக்கு புதுவையில் இருந்து ஹெலிகாப்டரில் சென்னை திரும்புகிறார்.




6.40 மணிக்கு சென்னை விமான நிலையம் வரும் பிரதமர் மோடி அங்கிருந்து காரில் கிண்டியில் உள்ள நட்சத்திர ஓட்டலுக்கு செல்கிறார். இரவு அங்கு தங்குகிறார். தொடர்ந்து கிண்டியில் நாளை மறுநாள் (04.04.2026)பாஜக நிர்வாகிகள் 150 பேருடன் பிரதமர் மோடி ஆலோசனை நடத்த இருந்தார். இந்நிலையில் சென்னையில் நாளை மறுநாள் நடக்க இருந்த பிரதமர் மோடி உடனான கட்சி நிர்வாகிகள் சந்திப்பு ரத்து செய்யப்பட்டுள்ளது. சென்னை தனியார் ஹோட்டலில் ஏப்.4ஆம் தேதி காலை 10 மணிக்கு நிர்வாகிகளை சந்திக்கவிருந்தார். பாஜக வேட்பாளர்கள் இதுவரை அறிவிக்கப்படாததால் நிர்வாகிகள் கூட்டத்தை மோடி ரத்து செய்ததாக தகவல் வெளியாகியுள்ளது. மாநில நிர்வாகிகள், மாவட்ட தலைவர்கள் என ஒரு சிலரை மட்டும் பிரதமர் மோடி சந்திக்கவிருப்பதாக கூறப்படுகிறது.

## காங்கிரஸ் வேட்பாளர் பட்டியல் ஏப்.2 இரவுக்குள் வெளியாகும்: மு.க.ஸ்டாலின் தகவல்... !

ஈரோடு, ஏப். 02–

தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் வருகிற 23–ந் தேதி நடக்கிறது. இதை முன்னிட்டு முதல்–அமைச்சர் மு.க.ஸ்டாலின் தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் கட்சி வேட்பாளர்களை ஆதரித்து வாக்குகள் சேகரித்து வருகிறார்.



அந்த வகையில் ஈரோட்டில் இன்று தி.மு.க. வேட்பாளர்களான முத்துசாமி (ஈரோடு மேற்கு), தோப்பு வெங்கடாசலம் (பெருந்துறை) சந்திரசேகர் (பவானி), சிவபாலன் (அந்தியூர்). நல்லசிவம் (கோபி) ஆகியோரையும்,, ஈரோடு கிழக்கு தொகுதியில் போட்டியிடும் காங்கிரஸ் வேட்பாளர், மொடக்குறிச்சி தொகுதி ம.தி.மு.க. வேட்பாளர் செந்தில்நாதன், பவானிசாகர் இந்திய கம்யூனிஸ்டு கட்சி வேட்பாளரை ஆதரித்து முதல்–அமைச்சர் மு.க.ஸ்டாலின் வாக்குகள் சேகரித்தார். பின்னர் தேர்தல் பிரசார பொதுக்கூட்டத்தில் முதல்–அமைச்சர் மு.க. ஸ்டாலின் பேசியதாவது:– இன்று இரவுக்குள் சகோதரர் ராகுல் காந்தி அவர்கள் காங்கிரஸ் கட்சியின் வேட்பாளர்களை அறிவிக்க உள்ளார். ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதியில் போட்டியிடும் காங்கிரஸ் வேட்பாளருக்கு கை சின்னத்தில் வாக்களித்து வெற்றி பெற செய்ய வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

## புதுச்சேரியில் அனுமதிக்கப்பட்ட 4 இடங்களில் 4-ம் தேதி பிரசாரம் செய்கிறார் விஜய்!

புதுச்சேரி, ஏப். 02–

புதுச்சேரியில் தவெக மற்றும் கூட்டணி கட்சியான நேயம் மக்கள் கழகம் வேட்பாளர்களை ஆதரித்து அக்கட்சி தலைவர் விஜய் வருகிற 5–ந் தேதி பிரசாரம் செய்வதாக இருந்தது. ஆனால், போலீசார் பாதுகாப்பு காரணங்களுக்காக ஒரு நாள் முன்னதாக, அதாவது 4–ந்தேதி (சனிக்கிழமை) பிரசாரம் செய்ய அனுமதித்துள்ளனர். கொக்குபார்க் சிக்னல், வெங்கடசுப்பா




ரெட்டியார் சிலை சதுக்கம், சோனாம்பாளையம் சந்திப்பு, கூடப்பாக்கம் ஆகிய 4 இடங்களில் மட்டும் விஜய் பிரசாரம் செய்ய அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. காலை 9 மணிக்கு தொடங்கி 4 மணி நேரத்திற்குள் பிரசாரத்தை முடித்துக் கொள்ள வேண்டும் என்று நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது.

அவர் பேசும் இடங்களில் குழந்தைகள், கர்ப்பிணிகளை அனுமதிக்க கூடாது. தமிழ்நாட்டைச் சேர்ந்த ரசிகர்கள் தொண்டர்கள் வரக்கூடாது. அனுமதி கொடுக்கப்பட்ட இடத்தில் மட்டுமே வேன் மேல் நின்று பேச வேண்டும் உள்ளிட்ட நிபந்தனைகள் விதிக்கப்பட்டுள்ளன.

## போர் எதிரொலி..

# மத்திய அரசின் அடுத்த வரி குறைப்பு.. பெட்ரோகெமிக்கல் பொருட்களுக்கு

## ஜீரோ வரி..!

புதுடெல்லி, ஏப். 02–

மத்திய அரசு, மத்திய கிழக்கில் நீடித்து வரும் போர் காரணமாக உலகளாவிய சப்ளை செயின் பாதிப்பு அதிகரித்துள்ள நிலையில், முக்கியமான பெட்ரோ கெமிக்கல் பொருட்களுக்கு தற்காலிக நிவாரணம் அளிக்கும் விதமாக முழுமையான வரிவிலக்கு வழங்கும் முக்கிய முடிவை எடுத்துள்ளது. ஏப்ரல் 2 முதல் அமலுக்கு கொண்டு வரும் வரையில் மத்திய இந்த உத்தரவை வெளியிட்டுள்ளது.




இந்த வரிவிலக்கு ஜூன் 30 வரை நடைமுறையில் இருக்கும். பெட்ரோல், டீசல், எரிவாயு தாண்டி இந்தியாவில் பெட்ரோகெமிக்கல் பொருட்கள் அதிகளவில் இறக்குமதி செய்யப்பட்டு வருகிறது. இதில் முக்கியமாக மருந்து உற்பத்தி, பெயிண்ட், டெக்ஸ்டைல், பேகேஜிப் மற்றும் பொம்மை உற்பத்தி போன்ற பல துறைகள் பல்வேறு விதமான பெட்ரோ கெமிக்கல் பொருட்களை உலகம் முழுவதிலும் இருந்து இறக்குமதி செய்து வருகிறது. தற்போது கச்சா எண்ணெய் விலை உயர்வால் பெட்ரோலியம் சார்ந்த அனைத்து பொருட்களின் விலையும் உயர்ந்துள்ளது. இதனால் பெட்ரோ கெமிக்கல் பொருட்களை மூலப்பொருளாக பயன்படுத்தும் அனைத்து உற்பத்தி துறையும் பாதிக்கப்பட்டு உள்ளது. இந்த பாதிப்பை குறைக்கும் விதமாக மத்திய அரசு இப்புதிய வரி விலக்கு கொடுத்துள்ளது. எந்த பொருட்களுக்கு வரிவிலக்கு?

மத்திய அரசு இன்று வெளியிட்டுள்ள புதிய அறிவிப்பின்படி, அமோனியம் நைட்ரேட், மெத்தனால், ஸ்டைரின், அசிட்டிக் ஆசிட் மற்றும் பாலிவினைல் குளோரைடு (PVC) போன்ற முக்கிய பெட்ரோ கெமிக்கல் பொருட்களின் வெளிநாட்டு இறக்குமதிக்கு வரிவிலக்கு வழங்கப்பட்டுள்ளது. மேலும், அமோனியம் நைட்ரேட்டுக்கு விதிக்கப்பட்டிருந்த Agriculture Infrastructure and Development Cess (AIDC) வரியும் ஏப்ரல் 2 முதல் ஜூன் 30 வரையிலான காலக்கட்டத்தில் நீக்கப்பட்டுள்ளது. இந்த வரிவிலக்கு மூலம் விவசாய மற்றும் தொழில்துறை உற்பத்தியில் பயன்படுத்தப்படும் முக்கிய மூலப்பொருட்கள் செலவுகளை குறைக்கும். இதனால் உற்பத்தி பொருட்களின் விலை நிலைகள் கட்டுக்குள் வைக்கப்படும்.

**எரிபொருள் வரி குறைப்பு:**


மத்திய அரசு இதற்கு முன், மார்ச் 27–ஆம் தேதி பெட்ரோல் மற்றும் டீசல் மீதான கலால் வரியையும் குறைத்தது. பெட்ரோலுக்கு லிட்டருக்கு ரூ.13 இருந்த வரி ரூ.3 ஆக குறைக்கப்பட்டது. டீசலுக்கு இருந்த ரூ.10 வரி முழுமையாக நீக்கப்பட்டு பூஜ்ஜியமாக அறிவிக்கப்பட்டது. இந்த நடவடிக்கைகள் அனைத்தும், சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலை அதிகரித்ததால் உள்நாட்டு விலை உயர்வை கட்டுப்படுத்தும் முயற்சியாக மத்திய அரசு மேற்கொண்டு வருகிறது.

**கடுமையான பாதிப்பு ;**

ஈரான் போர் காரணமாக, உலகளாவிய பெட்ரோ கெமிக்கல் சப்ளை செயின் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் கச்சா எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு விலைகள் உயர்ந்துள்ளது மட்டும் அல்லாமல் பல இடத்தில் தட்டுப்பாடும் நிலவுகிறது. இந்த உயர்வை ரிபைனரிகள் நேரடியாக downstream தொழில்துறை அதாவது பெட்ரோல், டீசல் தாண்டி உபரி உற்பத்தி பொருட்கள், 2ஆம் நிலை, 3ஆம் நிலை உற்பத்தி பொருட்களுக்கு விலை உயர்வை மாற்றியுள்ளது. இதனால், மருந்து உற்பத்தி, பெயிண்ட், டெக்ஸ்டைல் மற்றும் பொம்மை உற்பத்தி போன்ற பல துறைகள் கடுமையான செலவின பாதிப்பை எதிர்கொண்டு வருகிறது.

இந்த துறைகளில் பல சிறு மற்றும் நடுத்தர தொழில்கள் உள்ளன. குறிப்பாக, டெக்ஸ்டைல் உற்பத்தி போன்ற தொழில்கள் அதிகமான வேலைவாய்ப்பை வழங்கும் நிலையில், இந்த திடீர் விலை உயர்வை உடனடியாக வாடிக்கையாளர்களிடமும், ஒப்பந்ததாரர்களிடமும் மாற்ற முடியாத சூழ்நிலையில் இருக்கின்றன. இதனால் லாபம் குறைந்து, வேலைவாய்ப்பு பாதிப்பு உருவாகும் அபாயம் அதிகரித்துள்ளது. இந்த விலை பாதிப்பு உலகளாவிய பெட்ரோ கெமிக்கல் சப்ளை செயின் முழுமையாக சீராகும் வரை நீடிக்கும் என நிபுணர்கள் தெரிவிக்கின்றனர். குறிப்பாக, வளைகுடா பகுதியில் போர் முடிந்த பிறகே நிலைமை சீராகும் என எதிர்பார்க்கப்படுகிறது. போர் முடிந்து விலை குறைந்தாலும், தற்போது நிறுவனங்களும், பொருளாதாரமும் எதிர்கொண்டுள்ள பாதிப்பை சரி செய்ய சில பல வருடங்கள் ஆகும் என நிபுணர்கள் கூறுகின்றனர்.

## விண்வெளியில் ஒரு வரலாற்று நிகழ்வு!




விண்வெளி ஆராய்ச்சியில் ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்வாக, நாசாவின் ‘ஆர்டெமிஸ் II’ (Artemis II) விண்கலம் நான்கு விண்வெளி வீரர்களுடன் இன்று நிலவை நோக்கிப் பயணித்தது.

## திருச்சியில் விஜய் பரப்புரை!

திருச்சி, ஏப். 02–

சட்டசபை தேர்தலில் திருச்சி கிழக்கு தொகுதியில் போட்டியிட வேட்புமனு தாக்கல் செய்த தவெக தலைவர் விஜய் பிரசாரத்திற்கு முன்பு எம்ஜிஆர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். இதையடுத்து பிரசாரத்தின்போது அவர் கூறியதாவது:

* கேஸ் பிரச்சனை எப்படி இருக்கிறது? பிரச்சனை சரி ஆகி விட்டதா? இதனால் எத்தனை பிரச்சனைகள்?

* சமையல் எரிவாயு இல்லாததால் எவ்வளவு டீ கடைகள், உணவகங்கள் மூடப்பட்டுள்ளது.

* மத்திய, மாநில அரசுகள் கொஞ்சம் உஷாராக இருந்திருந்தால் கேஸ் பிரச்சனை பெரிய அளவில் இல்லாமல் இருந்திருக்கும்.

* ஸ்டாலின் சாரை கேட்டால் நமக்கும் அதுக்கும் சம்பந்தம் இல்லை எனக்கூறுவார், இதற்காக டெல்லி சென்றிருக்கலாமே?

* கேஸ் மானியம், வேலைவாய்ப்பு, நீட் ரத்து இவை அனைத்தும் என்னாச்சு?

* இப்போது அடுத்தகட்ட பொய் வாக்குறுதிகளுடன் முதல்வர் ரெடியாகி விட்டார்.

* பொய் வாக்குறுதிகளை கொடுத்து ஏமாற்றுவது தான் மு.க.ஸ்டாலினின் வேலை.

* திமுக போல் வாக்குறுதிகளை கொடுத்து ஏமாற்றாமல் தவெக கொடுத்த அனைத்து வாக்குறுதிகளையும் நிறைவேற்றும்.

* கல்வி, போக்குவரத்து, மருத்துவம் போன்ற அடிப்படை வசதிகளில் தான் எங்கள் கவனம் இருக்கும்.

* கழிவறை இல்லாததால் காட்டுப்பக்கம் ஒதுங்கிய பள்ளி சிறுமியின் நிலை என்னாச்சு?

* திருச்சியில் ஒரு மந்திரி இருக்கிறார், நகராட்சி துறையில் வேலை வாங்கி



தருவதாக கோடிக்கணக்கில் லஞ்சம் வாங்கி உள்ளார்.

* நகராட்சி துறையில் வேலை வாங்கி வருவதாக கூறி லஞ்சம் பெற்று ஏமாற்றி உள்ளார் ஒரு அமைச்சர்.

* கோடி கோடியாய் லஞ்சம் வாங்கும் இந்த அமைச்சர் உள்ளிட்ட திமுகவினரை தூக்கி எறிந்து விடுவோமா?

* 2000 கல்லூரி உதவி பேராசிரியர்களுக்கு பணி வழங்குவோம் எனக்கூறினர் 5 பேருக்கு மட்டுமே பணி வழங்கினர்.

இவ்வாறு அவர் கூறினார்.

தலையங்கம்
மதுரை மணி
வியாழக்கிழமை 02.04.2026
விசுவாவசு தமிழ் வருடம்
பங்குனி மாதம் 19-ம் தேதி

## தங்கம்: திடீர் யூ டர்ன்?



சர்வதேச அளவிலான நிச்சயமற்ற சூழலில் பாதுகாப்பான முதலீடாக கருதப்படும் தங்கம், கடந்த ஒரு மாதத்தில் சந்தித்த சரிவு 17 ஆண்டுகால சாதனையை முறியடித்திருக்கிறது. ஆனால் ஏப்ரல் தொடக்கத்திலேயே, மீண்டும் தனது பழைய வேகத்தை எட்டிப்பிடிக்க தொடங்கியுள்ளது. அமெரிக்க டாலரின் மதிப்பு, மத்திய வங்கிகளின் கொள்கை முடிவுகள் மற்றும் உலகளாவிய பதற்றங்கள் என எவை தங்கத்தை மீண்டும் அரியணையில் ஏற்றுகின்றன? வரும் நாட்களில் தங்கம் எட்டப்போகும் புதிய இலக்கு என்ன என்பதை பார்ப்போம். கடந்த மார்ச் மாதத்தில் தங்கம் விலையானது 11%–க்கு மேலாக வீழ்ச்சி கண்டு காணப்பட்டது. இது கடந்த 2008–க்கு பிறகு கண்ட மிக மோசமான ஒரு மாத சரிவாகும். இது மத்திய வங்கிகளின் வட்டி விகித முடிவு கடுமையாக்கப்படும் என்ற அச்சத்தின் மத்தியில் காணப்பட்டது. மேற்கொண்டு டாலர் மதிப்பும் வலுவாக காணப்பட்டது தங்கம் விலை சரிய முக்கிய காரணமாகவும் பார்க்கப்பட்டது. அமெரிக்கா – ஈரான் இடையிலான போர் பதற்றமானது நிலவி வந்தாலும், மத்திய வங்கிகள் நடப்பு ஆண்டில் இரண்டு முறை வட்டி விகிதத்தை குறைக்கலாம் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் தற்போது சர்வதேச அளவில் நிலவி வரும் பதற்றமான சூழல் ஆனது, வட்டி குறைப்பு எதிர்பார்ப்பை முற்றிலும் அகற்றியுள்ளது. மாறாக அதிகரித்து வரும் பணவீக்கம் மத்தியில், பாதுகாப்பு புகலிடமான தங்கம் விலை அதிகரிக்கும் என்றே எதிர்பார்க்கப்படுகிறது. குறுகிய கால அடிப்படையில் பார்க்கும்போது பலவீனமான டாலர், சரிவில் இருக்கும் பத்திர சந்தை என சில காரணிகள் மத்தியில், தொடர்ந்து நான்காவது நாளாக ஏற்றத்தை கண்டு வருகிறது. மேற்கொண்டு அமெரிக்கா – ஈரான் இடையிலான பிரச்சனையும் தொடர்ந்து அதிகரித்த வண்ணமே இருந்து வருகிறது. இது மீண்டும் தங்கத்தை உச்சம் தொட வைக்கலாம். முன்னதாக அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் அடுத்த 2 – 3 வாரங்களில் போர் முடிவுக்கு வரலாம் என சமிக்கை காட்டியிருப்பது நல்ல விஷயமாக பார்க்கப்பட்டது. இது முதலீட்டாளர்கள் மத்தியில் ஒரு நம்பிக்கையை விதைத்தது.

இருப்பினும் ஹார்மூஸ் ஜலசந்தியில் நிலவி வரும் பதற்றமும், போர் நிறுத்த ஒப்பந்தமும் எப்போது என்ற மிகப்பெரிய கேள்வியை எழுப்பியுள்ளது. இது சந்தையை ஒரு வித பதற்றத்திலேயே வைத்துள்ளது. இது குறுகிய காலத்தில் 17 ஆண்டுகால சரிவுக்குப் பிறகு ஏற்றம் காண முக்கிய காரணமாக இருக்கலாம். ஆனால் நீண்ட கால அடிப்படையில் இது போன்ற காரணிகள் கவனத்தில் கொள்ள வேண்டிய ஒன்று. குறிப்பாக ஈரானின் புதிய அதிபர் போர் நிறுத்தம் கோரியதாக டிரம்ப் கூறியதை அடுத்து, அதற்கு இது பொய்யானது, ஆதாரமற்ற தகவல் என ஈரானின் வெளியுறவுத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது. இது மேற்கொண்டு பிரச்சனை தற்போதைக்கு முடிவுக்கு வரும் என்ற நம்பிக்கையை உடைத்துள்ளது.

மேற்கொண்டு டிரம்பின் ஹார்மூஸ் ஜலசந்தி திறக்கப்பட்டு மிகவும் சுதந்திரமாகவும் பாதுகாப்பானதாகவும் இருந்தால் மட்டுமே நாங்கள் போர் நிறுத்தத்தை பரிசீலிப்போம் என்ற வார்த்தைகள், அப்படி நடக்கும் வரையில் நாங்கள் தாக்குதல் நடத்துவோம் என்பதாகத் தான் பார்க்கப்படுகிறது. ஆக குறுகிய காலத்தில் ஏற்ற இறக்கம் என்பது அதிகம் இருந்தாலும் நீண்ட கால அடிப்படையில் அதிகரிக்கவே செய்யும். அதற்கு இரு முக்கிய காரணிகள் பின்னணியில் இருக்கலாம். ஒன்று அதிகரித்து வரும் புவிசார் அரசியல் பதற்றங்கள், இதனால் கச்சா எண்ணெய் விலை ஏற்றம் தொடரலாம். இது பணவீக்கத்தை ஊக்குவிக்கலாம். இது பாதுகாப்பு புகலிடமான தங்கத்தை ஊக்குவிக்கலாம். இது ஆபரண தங்கம் விலையிலும் எதிரொலிக்கலாம்.

# CEPT பல்கலைக்கழகம் MBEP முதுநிலைப் படிப்பிற்கு விண்ணப்பங்கள் வரவேற்பு; மார்ச் 31 வரை அவகாசம்!

சென்னை, மார்ச், 02–

CEPT University தனது ‘மாஸ்டர் ஆஃப் பில்டிங் எனர்ஜி பெர்ஃபார்மன்ஸ் (MBEP)’ என்ற இரண்டு ஆண்டுகள் கொண்ட முழுநேர முதுநிலை படிப்பிற்கு விண்ணப்பங்கள் வரவேற்கிறது. தொழில்நுட்ப பீடம் வழங்கும் இந்தப் பாடத்திட்டம், கட்டிடங்களின் ஆற்றல் திறன் மற்றும் காலநிலை சார்ந்த வடிவமைப்பு மையமாகக் கொண்டது.விண்ணப்பங்கள் மார்ச் 31, 2026 வரை ஏற்கப்படும்.

இந்த MBEP பாடத்திட்டம், simulation, பரிசோதனை மற்றும் முறைமைகள் பற்றிய ஆழமான புரிதல் மூலம் கட்டிட ஆற்றல் செயல்திறனை மேம்படுத்தும் திறன் மாணவர்களுக்கு வழங்குகிறது. கட்டிடக்கலை, கட்டிட பொறியியல், கட்டிட இயற்பியல், மனித உடலியல் மற்றும் உளவியல் போன்ற பல துறைகளை ஒருங்கிணைக்கும் இந்த இடைத்துறை கற்றல் முறையில், ஆலோசனை, ஆய்வு, தொழில்முறை நடைமுறை மற்றும் கொள்கை வடிவமைப்பு போன்ற துறைகளில் திறமையான நிபுணர்களை உருவாக்குகிறது.

இதுகுறித்து CEPT பல்கலைக்கழகத்தின் பேச்சாளர் டாக்டர் அனில் பட்டேல் கூறுகையில், “இந்த MBEP திட்டம், கட்டிடங்களின் ஆற்றல் திறன் மற்றும் காலநிலை சவால்களை சமாளிக்க கூடிய திறமையான நிபுணர்களை உருவாக்குவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது. நடைமுறை அனுபவம் மற்றும் நவீன ஆய்வக வசதிகள் மூலம் மாணவர்கள் புதுமையான, செலவுக்கேற்ற தீர்வுகளை உருவாக்கக் கற்றுக்கொள்கிறார்கள்,” என்றார். GATE மதிப்பெண் பெற்றவர்கள் நேரடியாக விண்ணப்பிக்கலாம்; இல்லையெனில் CEPT PG தேர்வு மூலம் சேர வாய்ப்பு வழங்கப்படுகிறது.

# இந்தியாவில் மாதாந்திர டேட்டா பயன்பாடு 31 ஜிபி தாண்டியது: 5G டிராஃபிக் 70% உயர்வு நோக்கியா MBiT 2026 அறிக்கை!

சென்னை , ஏப். 02–




இந்தியாவில் ஒருவருக்கு மாதாந்திர சராசரி மொபைல் டேட்டா பயன்பாடு 31 ஜிபி கடந்துள்ளது Nokia வெளியிட்ட MBiT 2026 அறிக்கை தெரிவிக்கிறது. 2025ஆம் ஆண்டில் 5G டேட்டா டிராஃபிக் ஆண்டுக்கு 70% வளர்ச்சியுடன் 12.9 எக்ஸாபைட்டாக உயர்ந்ததுடன், மொத்த மொபைல் பிராட்பேண்ட் டிராஃபிக்கில் சுமார் 47% பங்கு 5G வகிக்கிறது. இதன் மூலம் இந்தியா உலகின் இரண்டாவது பெரிய 5G சந்தாதாரர் அடிப்படையைக் கொண்ட நாடாகத் திகழ்கிறது. மேலும், 4K வீடியோ ஸ்ட்ரீமிங், கிளவுட் கேமிங் மற்றும் செயற்கை நுண்ணறிவு பயன்பாடுகள் அதிகரித்ததன் காரணமாக டேட்டா தேவையும் தொடர்ந்து உயர்ந்து வருகிறது. 2025ஆம் ஆண்டில் மொத்த டேட்டா டிராஃபிக் மாதத்திற்கு 27 எக்ஸாபைட்டை கடந்துள்ளதுடன், மெட்ரோ நகரங்களில் 5G பயன்பாடு 58% வரை உயர்ந்துள்ளது. அதேசமயம், 5G ஸ்மார்ட்போன்களின் அதிகரித்த கிடைத்தால் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் 5G விரிவடைந்து வருகிறது.

இந்த வளர்ச்சி குறித்து Tarun Chhabra கூறுகையில், இந்தியாவின் மொபைல் பிராட்பேண்ட் துறை 5G மற்றும் AI பயன்பாடுகள் தாக்கத்தால் புதிய முன்னேற்ற நிலையை எட்டியுள்ளது என்றார். எதிர்காலத்தில் நெட்வொர்க்குகள் மேலும் புத்திசாலித்தனமாகவும், உயர் திறன் கொண்டதாகவும் மாற வேண்டிய அவசியம் இருப்பதாகவும், அதற்காக தொலைத்தொடர்பு நிறுவனங்களுடன் இணைந்து செயல்பட நோக்கியா உறுதியாக இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# பைசா பஜார் கிரெடிட் பிரீமியர் லீக் 2.0 மீண்டும்: இந்தியாவின் உயர்ந்த கிரெடிட் ஸ்கோர் சாம்பியனுக்கு ₹1 லட்சம் பரிசு!

சென்னை , ஏப். 02–




இந்தியாவில் நிதி தயாரிப்புகளுக்கான முன்னணி மார்கெட்பிளேஸ் பைசா பஜார் , நாட்டிலேயே உயர்ந்த கிரெடிட் ஸ்கோர் பெற்றவர்களை பாராட்டும் “கிரெடிட் பிரீமியர் லீக் (CPL) 2.0” திட்டத்தை மீண்டும் அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த முயற்சியால், நாட்டிலேயே அதிக கிரெடிட் ஸ்கோர் பெற்ற நபருக்கு ₹1 லட்சம் பரிசு வழங்கப்படும். மேலும், ஒவ்வொரு மாநிலத்திலும் முன்னிலைப் பெறும் நபர்களுக்கு ₹10,000 வழங்கப்படும். இந்த திட்டம் குறித்து பேசும்போது, சந்தோஷ் அகர்வால், கிரெடிட் பற்றிய விழிப்புணர்வை பெருமளவில் உருவாக்குவது நிறுவனத்தின் முக்கிய நோக்கம் இருப்பதாக கூறினார். CPL மூலம் ஈடுபாடு, விளையாட்டு அம்சம் (gamification), மற்றும் பரிசுகள் ஆகியவற்றை இணைத்து, கிரெடிட் ஸ்கோர் குறித்து பொதுமக்களிடையே அதிக கவனம் ஏற்படுத்த முயற்சிக்கிறார் என்றும் அவர் தெரிவித்தார்.

முன்னதாக நடைபெற்ற முதல் பதிப்பில் 55 லட்சத்திற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்ட நிலையில், CPL 2.0 மேலும் அதிக பரிசுகளும், விரிவான பங்கேற்பு வாய்ப்புகளும் கொண்டதாக உருவாக்கப்பட்டுள்ளது. பயனர்கள் Pais–abazaar தளத்தில் அல்லது செயலியில் உங்கள் இலவச கிரெடிட் ஸ்கோரை சரி பார்த்து இதில் பங்கேற்கலாம்; அதே செயலியில் தரவரிசைப் பட்டியல் காண்பிக்கப்படும்.

# திரைப்பட இயக்குநர் ஆர்.கே.செல்வமணி ஒரு குட்டிக் கதையை நினைவு கூர்ந்தார் (முதலில் உங்களிடம் இருப்பதை வைத்து நீங்கள் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும்).

திரைப்பட இயக்குநர் ஆர். கே. செல்வமணி ஒரு குட்டிக் கதையை நினைவு கூர்ந்தார் (முதலில் உங்களிடம் இருப்பதை வைத்து நீங்கள் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும்). By பேராசிரியர் அசோக் கே.சுந்திரமூர்த்தி. திரைமொழி (தமிழ் மாத இதழ்) முப்பெரும் விழா கே.கே.நகரில் உள்ள டிஸ்கவரி புக் பேலஸில் 29 மார்ச் 2026 அன்று நடைபெற்றது. ஆசிரியரும், திரைமொழி தமிழ் இதழின் நிறுவனருமான திரு ஆர். சுப்பிரமணியபாரதி அவர்கள் இந்த விழாவை ஏற்பாடு செய்து, என் குடும்பத்துடன் கலந்துகொள்ள என்னை அழைத்திருந்தார். (https://ashoksundra–moorthy.blogspot.com/) அங்கு சென்று, சினிமாவுக்கு அவர்கள் ஆற்றிய சாதனைகளையும் பங்களிப்புகளையும் கேட்பது பெரும் கௌரவமாகும். அனைத்து சமீபத்திய நேர்மறையான செய்திகளும் சிறப்பாக வெளியிடப்பட்டுள்ளன. திரு ஆர். சுப்பிரமணியபாரதி அவர்கள் கூறியபடி, இந்த இதழ் இலாப நோக்கற்ற நோக்கத்திற்காக நடத்தப்படுகிறது. இந்த நிகழ்ச்சியை திரைப்பட இயக்குநர் ஆர். கே. செல்வமணி சார் முன்னின்று நடத்தினார். இந்த நிகழ்ச்சிக்கு சினிமா இயக்குனர் திரு ஆர்.வி.உதயகுமார் தலைமை தாங்கினார். திரு ஆர். கே. செல்வமணி ஐயா பேசியபோது, கருணை, ஒருவருக்கொருவர் உதவுதல் மற்றும் நம்மிடம் உள்ளவற்றைக் கொண்டு மகிழ்ச்சியாக இருப்பதன் முக்கியத்துவத்தை சுட்டிக்காட்டினார். இது குறிப்பாக சினிமா துறைக்கும், மற்றவர்களைப் பற்றி சிந்திக்க யாருக்கும் நேரமில்லாத சென்னை நகரில் வாழும் மக்களுக்கும் மிகவும் அவசியமானது. திரு ஆர். கே. செல்வமணி ஐயா, தாம் முன்பு படித்த ஒரு கதையைப் பகிர்ந்துகொண்டார். ஒரு



ஏழை மனிதரிடம் 1000 ரூபாய் இருந்தது. அவர் தன் பிள்ளைகளுக்கும் மனைவிக்கும் துணி வாங்க விரும்பினார். அதனால், அவர் சென்னையில் ஒரு பரபரப்பான தெருவுக்குச் சென்றார். அவர் முதலில் ஒரு பெரிய துணிக்கடைக்குச் சென்று, தன் பிள்ளைகளுக்காக சில துணிகளைத் தேர்ந்தெடுத்தார். ஆனால், அதன் விலை 1400 ரூபாயாக ஆனது. அவர் கவலைப்பட்டு, தனக்கு இன்னும் 400 ரூபாய் தேவை என்று உணர்ந்தார். எனவே, அவர் மற்றொரு துணிக்கடைக்குச் சென்று மீண்டும் சில துணிகளைத் தேர்ந்தெடுத்தார். இப்போது அதன் விலை 1500 ரூபாயாக ஆனது. அவர் மீண்டும் வருத்தமடை ந்தார். தனக்கு இன்னும் 500 ரூபாய் தேவை என்று எண்ணி கவலைப்பட்டார். அவர் மீண்டும் மூன்றாவது துணிக்கடைக்குச் சென்றார். இந்த முறை அவர் தேர்ந்தெடுத்த துணிகள், தன் 1000 ரூபாய் பட்ஜெட்டுக்குள் அடங்கிவிடும் என்று மீண்டும் நம்பினார். ஆனால், அதன் விலை அதைவிட அதிகமாக இருந்தது. எனவே, தன்னிடம் இருந்த பணத்தில் சில துணிகளை வாங்க அவர் முடிவு செய்தார். அப்போது அவன் தன் பணப்பையை எடுக்க முயன்றான், ஆனால் அது அங்கு இல்லை. திடீரென்று ஒருவன் தன் பணப்பையுடன் ஓடுவதை அவன் உணர்ந்தான். இந்த முறை அவன் அதிர்ச்சியடைந்து அந்த மனிதனைப் பின்தொடர்ந்து ஓடத் தொடங்கினான். அவனால் அவனைப் பிடிக்க முடியவில்லை. அவன் சத்தமாக அழுதுகொண்டிருந்தான், என்ன செய்வதென்று தெரியாமல் தெருவில் விழுந்து அழுதுகொண்டிருந்தான். இதைக் கவனித்த மக்கள் அனைவரும் அந்த பிக்பாக்கெட் திருடனைப் பிடித்து அவனுக்கு உதவ வேண்டும் என்று சிந்திக்கத் தொடங்கினர். எப்படியோ, அவர்கள் தெருக்களில் தேடி அவனை அந்த மனிதனிடம் மீட்டு வந்து, 1000 ரூபாய் இருந்த பணப்பையை அவனிடம் ஒப்படைத்தனர். அதைப் பெற்ற பிறகு, அவன் மிகவும் மகிழ்ச்சியடைந்து மீண்டும் ஆனந்தக் கண்ணீர் சிந்தி, மற்றவர்களின் முயற்சிக்கு நன்றி தெரிவித்தான். இந்தக் கதையின் மூலம், அந்த மனிதனிடம் 1000 ரூபாய் இருந்தும், அவன் முன்பு மகிழ்ச்சியாக இல்லாமல் மேலும் தேடிக்கொ ண்டிருந்ததை நமக்கு நினைவூட்டுகி றான். ஆனால், அதை இழந்த பிறகுதான் 1000 ரூபாயின் முக்கியத்துவத்தை அவன் உணர்ந்தான். ஆகவே, நம்மிடம் இருப்பது மேலானது என்பதைப் புரிந்துகொள்ளவும், நாம் மகிழ்ச்சியாக இருக்க முயற்சிக்க வேண்டும் என்பதை உணரவும் மனிதர்களோ அல்லது அனுபவமோ தேவைப்படுகிறது. இது நம் ஒவ்வொருவருக்கும் ஒரு பயனுள்ள பாடம். நிகழ்ச்சிக்குப் பிறகு, நமது அன்புக்குரிய தமிழ்த் திரைப்பட இயக்குனர்களான ஆர். கே. செல்வமணி சார் மற்றும் ஆர். வி. உதயகுமார் சார் ஆகியோரைச் சந்தி த்ததில் நான் மிகவும் மகிழ்ச்சியடைந்தேன். இது என் வாழ்வின் மிகச் சிறந்த தருணங்களில் ஒன்றாகும். டாக்டர் அசோக் கே. சுந்தரமூர்த்தி இவ்வாறு கூறினார்.

# திருச்சி கிழக்கு தொகுதியில் விஜய் வேட்புமனு தாக்கல்!



திருச்சி, ஏப். 02–

திருச்சி கிழக்கு தொகுதியில் வேட்புமனு தாக்கல் செய்வதற்காக இன்று காலை சென்னையில் இருந்து தனி விமானம் மூலம் திருச்சிக்கு வந்தார்.

பிரசார வாகனத்தில் ஏறி நின்று உற்சாகமாக கையசைத்து செல்லும் விஜயை கண்டு தொண்டர்கள் ஆரவாரம் செய்தனர்.

இந்நிலையில் திருச்சி கிழக்கு தொகுதி தேர்தல் நடத்தும் அதிகாரி அலுவலகம் அமைந்துள்ள திருச்சி மாநகராட்சி இரண்டாவது மண்டலக்குழு அலுவலகத்தில் விஜய் வேட்புமனு தாக்கல் செய்தார்.



# கருட புராணம்: ஒருவர் மரணத்தின் விளிம்பில் இருக்கும்போது குடும்ப உறுப்பினர்கள் இதை செய்தால் சொர்க்கத்திற்கு செல்வார்..!



கருட புராணம் வாழ்க்கை மற்றும் மரணம் பற்றிய ஆழமான உண்மைகளை விளக்கும் ஒரு நூலும். ஒருவரின் கர்ம வினைகளே அவரது எதிர்காலத்தையும், மரணத்திற்குப் பிறகான அவரது நிலையையும் தீர்மானிக்கின்றன என்று இந்தக் கருட புராணத்தில் விளக்கப்பட்டுள்ளது.


இந்தக் கருட புராணத்தின் மிகச்சிறந்த அம்சம் என்னவென்றால், அது ஒருவரை நற்செயல்களைச் செய்யத் தூண்டுகிறது. இந்த நூலின்படி, ஒருவர் இறந்த பிறகு அல்லது மரண கட்டங்களில் இருக்கும்போது, அவரது குடும்ப உறுப்பினர்கள் செய்யும் சில செயல்கள் அவரை சொர்க்கத்திற்கு அழைத்துச் செல்லும்.

**துளசி:** சனாதன தர்மத்தில், துளசி ஒரு தேவியின் வடிவமாகக் கருதப்படுகிறது. ஒருவர் தன் உடலுக்கு அருகில் அல்லது வாயில் துளசி இலைகளுடன் இறந்தால், அவரது ஆன்மா யமலோகத்திற்குச் செல்ல வேண்டியதில்லை என்று நம்பப்படுகிறது. எனவே, இறக்கும் நேரத்தில் அந்த நபரை ஒரு துளசிச் செடிக்கு அருகில் வைப்பதும், அவரது நெற்றியில் அல்லது வாயில் ஒரு துளசி இலையை வைப்பதும் வழக்கமாக உள்ளது.


**கங்கை நீர்:** மரணத்தின் போது ஒருவர் தன் வாயில் கங்கை நீரை ஊற்றிக்கொள்ளும் ஒரு பாரம்பரியமும் உள்ளது. மத நம்பிக்கைகளின்படி, கங்கை நீர் ஸ்ரீ மகா விஷ்ணுவின் பாதங்களிலிருந்து தோன்றுகிறது. இந்த நீர் பாவங்களைக் கழுவிவிடும் என்று நம்பப்படுகிறது. கங்கை நீரை அருந்திய பிறகு, இறந்தவர் சொர்க்கத்தை அடைகிறார் என்றும் நம்பப்படுகிறது.

**கருப்பு எள்:** கருப்பு எள் மிகவும் புனிதமானதாகக் கருதப்படுகிறது. எள் விஷ்ணு பகவானுடன் தொடர்புடையது. எள் தானம் செய்வது மிகவும் மங்களகரமானதாகக் கருதப்படுகிறது. மரணத்தின் போது கருப்பு எள்ளை அருகில் வைத்திருப்பது தீய சக்திகளை விரட்டிவிடும். இது ஆன்மாவின் பயணம் சுமுகமாக நடைபெறுவதை உறுதி செய்யும் என்று நம்பப்படுகிறது.

**புல்:** மதச் சடங்குகளில் பயன்படுத்தப்படும் குசா புல், புனிதமானதாகவும் கருதப்படுகிறது. மரணத்தின் போது ஒருவரை குசா புல்லால் செய்யப்பட்ட பாயில் கிடத்துவதன் மூலம், அவரது ஆன்மா தூய்மையான மற்றும் அமைதியான பாதையில் பயணிக்க முடியும் என்று நம்பப்படுகிறது.



## சினிமா துளிகள்..!



### அனுமன் ஜெயந்தியை முன்னிட்டு “ராமாயணா” படத்தின் கிளிம்ப்ஸ் வீடியோ வெளியானது


மிகப்பெரிய பொருட்செலவில் நிதேஷ் திவாரி இயக்கத்தில் ‘ராமாயணா’ திரைப்படம் உருவாகி வருகிறது. இதில் ராமராக நடிகர் ரன்பீர் கபூரும், சீதையாக நடிகை சாய் பல்லவியும் நடித்துள்ளனர். ராவணன் கதாபாத்திரத்தை கன்னட நடிகர் யாஷ் ஏற்றுள்ளார். இந்திய அளவில் மிகப்பெரிய எதிர்பார்ப்புகளை கிளப்பியிருக்கும் இந்த படம் 2 பாகங்களாக உருவாகி வருகிறது. இதில் முதல் பாகம் 2026 தீபாவளிக்கும், இரண்டாம் பாகம் 2027 தீபாவளிக்கும் வெளியாகும் என அறிவிக்கப்பட்டது. இந்த படத்தின் மீது எதிர்பார்ப்பு அதிகரிக்க மற்றொரு முக்கிய காரணம், இந்த படத்தில் ஆஸ்கார் விருது பெற்ற 2 இசையமைப்பாளர்கள் பணியாற்றுவதுதான். சர்வதேச அளவில் புகழ்பெற்ற இந்திய இசையமைப்பாளரான ஏ.ஆர்.ரகுமானும், லயன் கிங், கிளாடியேட்டர் இன்டர்ஸ்டெல்லார் உள்ளிட்ட உலகப்புகழ் பெற்ற படங்களுக்கு இசையமைத்த ஹான்ஸ் ஜிம்மரும் இந்த படத்தில் இணைந்து பணியாற்றுகின்றனர். இவர்கள் இருவருமே தலா 2 ஆஸ்கார் விருதுகளை வென்றவர்கள் ஆவர். இந்தியாவின் புகழ்பெற்ற இதிகாச திரைப்படத்திற்கு இசையமைக்க ஏ.ஆர்.ரகுமானுடன், ஹான்ஸ் ஜிம்மர் இணைந்திருப்பது ரசிகர்களை உற்சாகத்தில் ஆழ்த்தியுள்ளது.

‘ராமாயணா’ படத்தின் முதல் கிளிம்ப்ஸ் வீடியோவை கடந்த ஜனவரியில் படக்குழு வெளியிட்டது. இந்த கிளிம்ப்ஸ் வீடியோவில் பிரம்மா, விஷ்ணு மற்றும் சிவன் ஆகியோரது காட்சிகளும், பின்னர் ராமர் மற்றும் ராவணன் சண்டையிடும் ஒரு காட்சியும் இடம்பெற்றுள்ளது. மேலும் அனுமனாக நடித்துள்ள சன்னி தியோல் தோன்றும் காட்சியும் இடம்பெற்றது. மூன்று நிமிடங்கள் ஓடும் இந்த கிளிம்ப்ஸ் வீடியோவில் பிரமாண்ட கிராபிக்ஸ் காட்சிகள் இடம் பெற்றுள்ளன. குறிப்பாக இப்படம் ஐமேக்ஸ் தொழில்நுட்பத்தில் உருவாக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், அனுமன் ஜெயந்தியை முன்னிட்டு ‘ராமாயணா’ திரைப்படத்தில் ‘ராமர்’ கதாபாத்திரத்தின் கிளிம்ப்ஸ் வீடியோவை படக்குழு வெளியிட்டுள்ளது. இந்த வீடியோவின் விஎஃப்எக்ஸ் தரம் இந்தியத் திரைப்படத் தரத்தை ஒரு படி மேலே கொண்டு செல்வதுபோல் உள்ளது.இந்த படம் திரையரங்குகளில் கண்களுக்கு விருந்தாக அமையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## நலம் நலமறிய..! மருத்துவ குறிப்புகள்



## நீங்கள் செய்யும் இந்த 2 தவறுகள் உங்கள் சிறுநீரகங்களை சேதப்படுத்தும்..!



இந்த நவீன காலத்தில், அனைவரின் வாழ்க்கை முறையும் பெரிதும் மாறிவிட்டது. நாம் வழக்கமாகச் செய்யும் சிறிய தவறுகள் கூட நமது ஆரோக்கியத்தைப் பாதிக்கக்கூடும். ஆனால் சில எளிய பழக்கங்களை மாற்றிக்கொள்வதன் மூலம் உங்கள் சிறுநீரகங்களை ஆரோக்கியமாகப் பராமரிக்கலாம். சில முக்கியமான விஷயங்களை அறிந்துகொள்வோம்:

**குறைவான அளவு நீர் அருந்துதல்:**

பலர் செய்யும் ஒரு தவறு இது. அவர்கள் நாள் முழுவதும் போதுமான அளவு தண்ணீர் குடிப்பதில்லை. இதனால் உடலில் நச்சுகள் (toxins) தேங்கத் தொடங்குகின்றன. இது சிறுநீரகங்களுக்குக் கூடுதல் அழுத்தத்தை ஏற்படுத்துகிறது. தொடர்ந்து குறைவான அளவு தண்ணீர் அருந்துவது, காலப்போக்கில் சிறுநீரகங்களின் செயல்பாட்டுத் திறனைக் குறைத்துவிடுகிறது.

உங்கள் சிறுநீரகங்களை ஆரோக்கியமாக வைத்துக்கொள்ள, தினமும் குறைந்தது 8 முதல் 9 டம்ளர் தண்ணீர் அருந்துவது மிகவும் அவசியமாகும். அதிக அளவு தண்ணீர் அருந்துவது, சிறுநீரகப் பிரச்சினைகளிலிருந்து உங்களைப் பாதுகாத்துக்கொள்ள உதவும் என்று மருத்துவர்கள் கூறுகின்றனர்.

**அதிகப்படியான உப்பு உட்கொள்ளல்:**

உங்கள் அன்றாட உணவில் அதிகப்படியான உப்பைச் சேர்த்துக்கொள்வது சிறுநீரகங்களுக்குத் தீங்கு விளைவிக்கக்கூடும். அதிகப்படியான உப்பு இரத்த அழுத்தத்தை அதிகரிக்கிறது; இது சிறுநீரகங்களின் மீது நேரடித் தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

நீண்ட காலத்திற்கு உங்களுக்கு உயர் இரத்த அழுத்தம் (High Blood Pressure) இருந்தால், சிறுநீரகங்களின் செயல் திறன் குறைந்து, தீவிரமான உடல்நலப் பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்புள்ளது. சிறுநீரகப் பிரச்சினைகள் ஏற்படுவதற்கு இதுவும் ஒரு முக்கிய காரணமாகும்.

**கவனத்துடன் இருங்கள்;**

ஆரோக்கியமாக வாழுங்கள். உங்கள் பழக்கவழக்கங்களில் சிறிய மாற்றங்களைச் செய்துகொள்வதன் மூலம், சிறுநீரகங்கள் பெரும் பாதிப்புக்குள்ளாவதிலிருந்து நீங்கள் அவற்றைப் பாதுகாக்கலாம். எனவே, இன்றே விழித்துக்கொண்டு, உங்கள் தவறுகளைத் திருத்திக்கொண்டு, ஆரோக்கியமான வாழ்க்கையை வாழுங்கள் என்று நிபுணத்துவ மருத்துவர்கள் அறிவுறுத்துகின்றனர்.

இக்காலத்தில் பலரிடையே காணப்படும் ஒரு பொதுவான பிரச்சினை சிறுநீரகக் கற்கள் ஆகும். குறிப்பிட்ட சில உப்புகளும் தாதுக்களும் நமது சிறுநீரகங்களில் தேங்கும்போது, அவை சிறுநீர் வழியாக வெளியேற்றப்பட வேண்டும். அவ்வாறு வெளியேற்றப்படாவிட்டால், அவை படிப்படியாகக் கற்களாக உருவெடுக்கின்றன. தற்போது இளைஞர்கள் மத்தியிலேயே இந்தப் பிரச்சினை அதிகமாகக் காணப்படுகிறது. இதற்கு முக்கியக் காரணங்களாகத் தவறான வாழ்க்கை முறை, போதுமான அளவு தண்ணீர் அருந்தாமை, துரித உணவுகள் (Junk food), மற்றும் அதிகப்படியான உப்பு, புரதம் ஆகியவற்றை உட்கொள்ளுதல் ஆகியவை அமைகின்றன.

## மீண்டும் குறைந்த தங்கம் விலை!



சென்னை, ஏப். 02–

சென்னையில் இன்று 22 கேரட் ஆபரணத் தங்கத்தின் விலை சவரனுக்கு ரூ.800 குறைந்து ரூ.1,11,600–க்கு விற்பனை செய்யப்படுகிறது. தங்கம் விலை கிராமுக்கு ரூ.100 குறைந்து ரூ.13,950–க்கு விற்பனை செய்யப்படுகிறது.

தங்கத்தை போன்று வெள்ளி விலையும் இன்று குறைந்துள்ளது. வெள்ளி விலை கிராமுக்கு ரூ.10 குறைந்து ஒரு கிராம் வெள்ளி ரூ.255–க்கும், பார் வெள்ளி 2 லட்சத்து 55 ஆயிரம் ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகிறது.

## மதுரை கோட்டத்தில் புதிய கூடுதல் கோட்ட ரயில்வே மேலாளர் பதவியேற்பு!



மதுரை, ஏப். 02–

புதிய கூடுதல் கோட்ட ரயில்வே மேலாளர் மதுரை கோட்டத்தில் புதிய கூடுதல் கோட்ட ரயில்வே மேலாளராக வி. பிரசன்னா புதன்கிழமை (ஏப்ரல் 1) அன்று பதவியேற்றுள்ளார். தற்போதைய கூடுதல் கோட்ட ரயில்வே மேலாளர் எல். என். ராவ் செவ்வா ய்க்கிழமை அன்று ஓய்வு பெற்றதைத் தொடர்ந்து வி. பிரசன்னா புதிய கூடுதல் கோட்ட ரயில்வே மேலாளராக பதவி ஏற்றுள்ளார். பிரசன்னா இதற்கு முன்பு தென்கிழக்கு ரயில்வேயில் முதன்மை சரக்கு போக்குவரத்து மற்றும் இழப்பீடு துறை வர்த்தக மேலாளராக பணியாற்றி வந்தார். இவர் 2007 ஆம் ஆண்டு இந்திய ரயில்வே போக்குவரத்து சேவை பிரிவை சேர்ந்தவர். இவர் திருப்பரங்குன்றம் தியாகராஜர் பொறியியல் கல்லூரியில் இளங்கலை மின்னனுவியல் மற்றும் தகவல் தொடர்பு பொறியியல் பட்டம் பெற்றவர்.

இவர் மதுரை, திருச்சி, பாலக்காடு கோட்டங்களில் முதுநிலை கோட்ட ரயில் போக்குவரத்து மேலாளராக பணியாற்றியுள்ளார். மேலும் மதுரை கோட்டத்தில் முதுநிலை கோட்ட வர்த்தக மேலாளர், சென்னை கோட்டத்தில் முதுநிலை கோட்ட பாதுகாப்பு அதிகாரி, தெற்கு ரயில்வேயில் இணை முதன்மை ரயில் போக்குவரத்து மேலாளராகவும் பணியாற்றியவர். இவர் இந்த பதவிகளில் சிறப்பாக பணியாற்றி ஐந்து திறன் சுழற் கேடயங்களை பெற்றவர்.

# விமானக்கட்டணம் அதிரடி உயர்வு!



சென்னை, ஏப். 02–

போர் காரணமாக சர்வதேச சந்தையில் விமான எரிபொருள் விலை வரலாறு காணாத வகையில் நேற்று கிலோ லிட்டருக்கு ரூ.2 லட்சத்து 7 ஆயிரத்து 341 ஆக உயர்ந்துள்ளது. இது பிப்ரவரி மாத இறுதியில் இருந்த விலையைவிட 114.5 சதவீதம் அதிகமாகும்.

இந்திய விமான போக்குவரத்துத்துறை தற்போது உலக அளவில் மூன்றாவது பெரிய சந்தையாக வளர்ந்து வருகிறது. 2026–ம் ஆண்டு நிலவரப்படி, இந்தியாவின் ஒட்டுமொத்த விமானங்களின் எண்ணிக்கை 900–ஐ நெருங்குகிறது. அதில் சுமார் 850 விமானங்கள் இயக்கத்தில் உள்ளன.

இதில் இண்டிகோ, ஏர் இந்தியா மற்றும் ஆகாசா போன்ற நிறுவனங்கள் முன்னிலையில் உள்ளன. இந்தியாவில் ஒரு நாளைக்கு தோராயமாக 22 ஆயிரம் முதல் 25 ஆயிரம் கிலோ லிட்டர் விமான எரிபொருள் பயன்படுத்தப்படுகிறது.

விமான நிறுவனங்களின் செயல்பாட்டு செலவில் 40 சதவீதம் எரிபொருளுக்கே செலவிடப்படுவதால், வரும் கோடை விடு முறை காலத்தில் விமான டிக்கெட் விலை 30 முதல் 50 சதவீதம் வரை உயர வாய்ப்பு உள்ளது. இந்த விலையேற்றம் விமான நிறுவனங்களுக்கு பெரும் நிதி நெருக்கடியை ஏற்படுத்தும். ஐ.சி.ஆர்.ஏ. அறிக்கையின்படி, 2026 நிதியாண்டில் இந்திய விமான நிறுவனங்களின் ஒட்டுமொத்த நஷ்டம் ரூ.18 ஆயிரம் கோடியாக அதிகரிக்கக்கூடும் என எச்சரிக்கப்பட்டு உள்ளது.

எரிபொருள் விலை உயர்வு காரணமாக உள்நாட்டு விமான கட்டணங்கள் பெருமளவு அதிகரித்து உள்ளன. அதன்படி ஜனவரி மாதத்தில் இருந்த குறைந்தபட்ச விமான கட்டணத்தைவிட நேற்று முதல் விமான கட்டணம் உயர்ந்துள்ளது.

சென்னை விமான நிலையத்தில் உள்நாட்டு விமான கட்ட ணங்கள் ‘கிடுகிடு’வென உயர்ந்துள்ளன. இந்த கட்டண உயர்வுகள் தமிழ்நாட்டுக்குள் இயக்கப்படும் உள்நாட்டு விமானங்களில் மிகவும் அதிகமாகவும், சென்னையில் இருந்து வெளி மாநிலங்களுக்கு இயக்கப்படும் விமானங்களுக்கு ஓரளவு குறைவாகவும் உள்ளன.



பழனி பங்குனி உத்திரம் திருவிழாவையொட்டி, பக்தர்களுக்கு நீர் மோரினை கோவில் நிர்வாக அதிகாரி மாரிமுத்து வழங்கினார். திருக்கோயின் இச்செயலுக்கு ஆயிரக்கணக்கான பக்தர்கள் பாராட்டு தெரிவித்தனர். அருகினில் அறங்காவலர் ஜி ஆர் பாலசுப்பிரமணியம், அன்னபூரணி ஆகியோர் உள்ளனர்.

## திருச்சியில் இருந்து சவுதி அரேபியா வழியாக குவைத்துக்கு விமானம் இயக்கம்!




திருச்சி, ஏப். 02–

திருச்சியில் இருந்து தமாம், சவுதி அரேபியா வழியாக குவைத்திற்கு புதிய விமான நிறுவனமான ஜெசிரா தனது சேவையை வருகிற 7–ந்தேதி முதல் தொடங்க உள்ளது. இந்த விமான சேவையானது செவ்வாய்க்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் இரவு 8.25 மணிக்கு குவைத் விமான நிலையத்தில் இருந்து புறப்பட்டு திருச்சி விமான நிலையத்திற்கு அதிகாலை 4.40 மணிக்கு வந்தடையும்.

பின்னர் மீண் டும் இந்த விமானம் திருச்சி விமான நிலையத்தில் இருந்து புதன் மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் அதிகாலை 5.25 மணிக்கு புறப்பட்டு குவைத் விமான நிலையத்திற்கு 8.45 மணிக்கு சென்றடையும். இதனால் பயணிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

# வேனை பின் தொடர்ந்து விபத்தில் சிக்கிய தம்பதி.. இறங்கி சென்று நலம் விசாரித்த விஜய்!



திருச்சி, ஏப். 02–

தவெக தலைவர் விஜய் இன்று திருச்சி கிழக்கு தொகுதியில் வேட்பு மனு தாக்கல் செய்கிறார். வேட்பு மனு தாக்கல் செய்துவிட்டு, திருச்சி கிழக்கு தொகுதியில் பிரசாரமும் செய்ய உள்ளார். விஜய் ஒரு இடத்தில் மட்டுமே பிரசாரம் செய்ய அனுமதி அளிக்கப்பட்டது. , மரக்கடை எம்.ஜி.ஆர். சிலை அருகே விஜய் பிரசாரம் செய்ய உள்ளார். வேட்பு மனு தாக்கல் செய்வதற்காக விஜய் சென்னையில் இருந்து தனி விமானம் மூலம் திருச்சி வந்தார். திருச்சியில் இருந்து திறந்த வேனில் நின்றபடி, தொண்டர்களுக்கு கை அசைத்தபடி விஜய் வந்தார். அப்போது, விஜய்யை பின்தொடர்ந்து இருசக்கர வாகனத்தில் வந்த ஒரு தம்பதி அங்கு விபத்தில் சிக்கினர். இதைக் கவனித்த விஜய் உடனடியாக வேனில் இருந்து இறங்கி சென்று, அவர்களை நேரில் நலம் விசாரித்தார். பின்னர் தனது வேனில் புறப்பட்டுச் சென்றார்.

விஜய்யை பின்தொடர்ந்து யாரும் பைக்கில் வரக்கூடாது என்று கட்சி தலைமையகம் எச்சரித்தும், இதை பொருட்படுத்தாமல் இன்றும் தவெக தொண்டர்கள் விஜய் வேனை பின்தொடர்ந்து வந்ததை காண முடிந்தது

## ஆண்டிபட்டி சட்டமன்ற தொகுதி தி.மு.க. வேட்பாளர் எம்.எல்.ஏ. மகாராஜன் தேர்தல் பிரச்சாரம்



ஆண்டிபட்டி, ஏப். 02–

ஆண்டிபட்டி சட்டமன்ற தொகுதி தி.மு.க.வேட்பாளர் ஆ.மகாராசன் எம்.எல்.ஏ, ஆண்டிபட்டி ஒன்றியத்தில் தனது தேர்தல் பிரச்சாரத்தை ஆண்டிபட்டி ஒன்றியம் திம்மரச நாயக்கனூரில் தொடங்கினார். தேனி மாவட்டம் ஆண்டிபட்டி சட்டமன்ற தொகுதி தி.மு.க. வேட்பாளர் ஆ.மகாராசன் ஆண்டிபட்டி ஒன்றியத்தில் உள்ள திம்மரசநாயக்கனூர், பிள்ளை முகம் பட்டி, டி. பொம்மிநா யக்கன்பட்டி, மல்லையாபுரம், டி. சுப்புலாபுரம், ராஜகோ பாலன்பட்டி , மறவபட்டி, கதிர், ராஜதானி உள்பட 28 கிராமங்களில் வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார். கிராமங்களில் பெண்கள் ஆரத்தி எடுத்தும், தொண்டர்கள் மலர்கள் தூவியும் சிறப்பான வரவேற்பு அளித்தனர்.

உடன் கிழக்கு ஒன்றிய செயலாளர் ராஜாராம், கம்யூனிஸ்ட் வெங்கடேஷ் ,தி.மு.க.மா வட்ட இளைஞர் அணி அமைப்பாளர் செல்வம், ஒன்றிய அமைப்பாளர் அர்ச்சுணன், மாவட்டமாணவரணி அமைப்பாளர் பிரகாஷ், பொம்மி நாயக்கன்பட்டியில் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் அஷ்சயா ராம்குமார், டி. சுப்புலாபுரம் கார்த்தி, செல்லப்பாண்டி, ராஜகோபாலன்பட்டியில் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் வேல்மணி பாண்டியன், முன்னாள் மாவட்ட கவுன்சிலர் ஜி.கே. பாண்டியன் ஆகியோர் வேட்பாளர் மகாராசன் எம்.எல்.ஏவிற்கு சிறப்பான வரவேற்பு அளித்தனர்.

## ஆண்டிபட்டி சட்டமன்ற தொகுதி ஆலோசனை கூட்டம்!



ஆண்டிபட்டி, ஏப். 02–

ஆண்டிபட்டி சட்டமன்ற தொகுதி தேசிய ஜனநாயக கூட்டணி கட்சிகளின் ஆலோசனை கூட்டம் நடந்தது. தேனி மாவட்டம் ஆண்டிபட்டியில் அ.தி.மு.க.வேட்பாளராக ஆ.லோகிராஜன் போட்டியிடுகிறார். கடந்த 2 முறை போட்டியிட்டு வெற்றிவாய்ப்பை இழந்த நிலையில் மூன்றாவது முறையாக களம் காண்கிறார். தேர்தல் பணிகளை தொய்வில்லாமல் பணியாற்ற தேசிய ஜனநாயக கூட்டணி கட்சிகளின் ஆலோசனை கூட்டம் நடத்தப்பட்டது. கூட்டத்திற்கு தெற்கு மாவட்ட செயலாளர் ராமர் தலைமை தாங்கினார். வேட்பாளர் லோகிராஜன் மற்றும்கூட்டணி கட்சிகளின் மாவட்ட நிர்வாகிகள் முன்னிலை வகித்தனர். ஆண்டிபட்டி கிழக்கு ஒன்றிய செயலாளர் டி.ஆர்.என். வரதராஜன், பேரூர் செயலாளர் அருள்மதி கணேசன்,அருண்குமார், கம்பம் ஜெயகுமார் உள்பட தேசிய ஜனநாயக கூட்டணி கட்சிகளின் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் நிர்வாகிகள் கலந்துகொண்டு ஆலோசனை வழங்கினார்கள்.



இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்
127, T.P.K.ரோடு, மதுரை.
Ph: 98659 88882
மதுரை to சென்னை
ரெகுலர் சர்வீஸ்
பஸ் மற்றும் பார்சல் சர்வீஸ் உள்ளது
சென்னை
Ph: 98659 88881

# வேலை வாய்ப்பு

## மத்திய அரசின் MCL நிறுவனத்தில் 667 காலியிடங்கள்.. கை நிறைய சம்பளம்..!

மத்திய அரசின் பொது துறை நிறுவனங்களில் ஒன்றான MCL நிறுவனம், ஜூனியர் ஓவர்மேன், மைனிங் சிர்தார், சர்வேயர், மொழிபெயர்ப்பாளர் மற்றும் டெக்னீஷியன் உள்ளிட்ட பல்வேறு பணிகளில் காலியாக உள்ள 667 இடங்களை நிரப்புவதற்கான அதிகாரப்பூர்வ அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

காலிப்பணியிடங்கள்:
ஜூனியர் ஓவர்மேன் 192,
மைனிங் சிர்தார் 448,
சர்வேயர் 24,
மொழிபெயர்ப்பாளர் 1
பேத்தாலஜி டெக்னீஷியன் 2

வயது வரம்பு: விண்ணப்பதாரர்கள் 18 முதல் 30 வயதுக்கு உட்பட்டவர்களாக இருக்க வேண்டும்.

கல்வித்தகுதி:

* ஜூனியர் ஓவர்மேன் மற்றும் மைனிங் சிர்தார் பணிகளுக்கு மைனிங் இன்ஜினியரிங் துறையில் டிப்ளமோ அல்லது பட்டப்படிப்பு முடித்திருக்க வேண்டும்.
* சர்வேயர் பணிக்கு மைனிங் அல்லது மைன் சர்வேயிங் துறையில் டிப்ளமோ/பட்டப்படிப்பு பெற்றிருக்க வேண்டும்.
* மொழிபெயர்ப்பாளர் பணிக்கு ஹிந்தி மற்றும் ஆங்கிலப் பாடங்களுடன் பி.ஏ (B.A) பட்டம் பெற்றிருப்பது அவசியமாகும்.

சம்பளம்: இந்த பணிகளுக்கு தேர்வு செய்யப்படும் பணியாளர்களுக்கு மாதம் ரூ.41,966 முதல் ரூ.51,103 வரை சம்பளம் வழங்கப்படும். இதற்கு கூடுதலாக அகவிலைப்படி (DA), வீட்டு வாடகைப்படி (HRA), மருத்துவ வசதிகள், வருங்கால வைப்பு நிதி (CPF) மற்றும் கிராஜுவிட்டி போன்ற பல்வேறு சலுகைகளும் நிறுவன விதிகளின்படி வழங்கப்படும்.

கட்டணம்: விண்ணப்பதாரர்கள் விண்ணப்பக் கட்டணமாக ரூ. 1180 செலுத்த வேண்டும். எஸ்சி (SC), எஸ்டி (ST) மற்றும் பெண் விண்ணப்பதாரர்கள் எவ்விதக் கட்டணமும் செலுத்தத் தேவையில்லை.

எப்படி விண்ணப்பிப்பது? விண்ணப்பிக்க விரும்புவோர் www.mahanadicoal.in என்ற அதிகாரப்பூர்வ இணையதளம் வாயிலாக ஆன்லைனில் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பிக்க கடைசி நாள்: 06 ஏப்ரல் 2026 இரவு 11:50 மணி வரை ஆகும்.

## கொங்குநாடு மக்கள் தேசிய கட்சியின் சார்பில் வேட்பாளர்கள் அறிமுக கூட்டம்!



நாமக்கல், ஏப். 02–

தமிழ்நாடு முதலமைச்சர் தலைவர் தளபதி M. K. Stalin அவர்களின் நல்லாசியுடன் கழக இளைஞர் அணி செயலாளர் மாண்புமிகு.தமிழ்நாடு துணை முதலமைச்சர் அண்ணன் இளம்தலைவர் உதயநிதி ஸ்டாலின் வாழ்த்துக்களுடன் கொங்குநாடு மக்கள் தேசிய கட்சியின் சார்பில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் நாமக்கல் சட்டமன்ற தொகுதி வேட்பாளர் ப.ராணி மற்றும் சேந்தமங்கலம் சட்டமன்ற தொகுதி வேட்பாளர் பூமலர் பொன்னுசாமி ஆகியோரை அறிமுகம் செய்து கொங்கு நாடு மக்கள் தேசிய கட்சியின் பொதுச் செயலாளர் ஈ.ஆர்.ஈஸ்வரன் உரையாற்றினார். இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டு நான் திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகளை எடுத்துரைத்து கழக வேட்பாளர்களை ஆதரித்து மாநிலங்களவை உறுப்பினர் கே ஆர் என் இராஜேஷ்குமார் உரையாற்றினார் . நிகழ்ச்சியில் நாமக்கல் பாராளுமன்ற உறுப்பினர் திரு.வி.மாதேஸ்வரன், மாநகராட்சி மேயர் திரு.து.கலாநிதி, துணை மேயர் நாமக்கல் கிழக்கு நகர செயலாளர் திரு.செ.பூபதி, ஒன்றிய கழக செயலாளர்கள் திரு.அ.அசோக்குமார்,திரு.பி.பாலு (எ ) பாலசுப்ரமணியன், திரு.விகே.பழனிவேல்,திரு.பெ.நவலடி,திரு.எம்பி.கௌதம் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



பழனி சன்னதி வீதியில், பங்குனி உத்திர பக்தர்களின் வசதிக்காக, கோடை காலத்தை முன்னிட்டு, கோடைகால வெப்பம் தாக்காமல் இருக்க, நடைபாதையில் கயிறினால் ஆன விரிப்புகள் போடப்பட்டது.





# அனல் பறக்கும் தேர்தல் களம்..!



## ரணகளமாகும் சத்தியமூர்த்தி பவன்



புதுடெல்லி, ஏப். 02–

தமிழக காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை தயாரித்த வேட்பாளர் பட்டியலுக்கு எதிர்ப்பு தெரிவித்து, பெண் தொண்டர் ஒருவர் தீக்குளிக்க முயன்ற சம்பவமும், மாணிக்கம் தாகூர் தனது தேர்தல் பொறுப்பாளர் பதவியை ராஜினாமா செய்திருப்பதும் சத்தியமூர்த்தி பவனை அதிரவைத்துள்ளது.

இதுகுறித்து சத்தியமூர்த்தி பவன் வட்டாரங்கள் கூறியதாவது:

திமுக கூட்டணியில் கடந்த சட்டப்பேரவை தேர்தலில் காங்கிரஸுக்கு 25 தொகுதிகள் ஒதுக்கப்பட்டன. ஆனால் இந்த முறை, “40 தொகுதிகள் வேண்டும், ஆட்சி அதிகாரத்தில் பங்கு வேண்டும்” என மாணிக்கம் தாகூர், பிரவீன் சக்கரவர்த்தி போன்றோர் போர்க்கொடி தூக்கினர். இதனால் கூட்டணிக்குள் புகைச்சல் ஏற்பட்டது. இறுதியில் சோனியா காந்தியிடம் முதலமைச்சர் ஸ்டாலின் பேசிய பிறகே, ராகுல் காந்தி பேச்சுவார்த்தைக்குச் சம்மதித்தார். மேலிடப் பொறுப்பாளர் கிரிஷ் சோடங்கர் 35 தொகுதிகள் என்பதில் உறுதியாக இருந்தும் திமுக பணியவில்லை. இறுதியில் ப. சிதம்பரம் மூலமாக 28 தொகுதிகளுக்கு காங்கிரஸை செல்வப்பெருந்தகை ஒப்புக்கொள்ள வைத்தார். இது தொண்டர்களிடையே கடும் அதிருப்தியை ஏற்படுத்தியது.

திமுக ஒதுக்கியிருக்கும் பல தொகுதிகளில் வெற்றி வாய்ப்பு குறைவாக இருப்பதாகக் கருதும் தொண்டர்கள், வேட்பாளர் தேர்விலும் அதிருப்தி அடைந்துள்ளனர். அதாவது செல்வப்பெருந்தகை தனது ஆதரவாளர்கள் 20 பேருக்கு வாய்ப்பளிக்கும் வகையில் அந்த பட்டியலைத் தயாரித்து டெல்லிக்கு அனுப்பியதாகக் கூறப்படுகிறது. இதற்கு எதிர்ப்பு தெரிவித்து கே.எஸ். அழகிரி, திருநாவுக்கரசர் உள்ளிட்ட முன்னாள் தலைவர்கள் டெல்லிக்குக் கடிதம் எழுதியுள்ளனர். மேலும் ஜோதிமணி, மாணிக்கம் தாகூர் உள்ளிட்ட எம்.பி–க்கள் புகார் அளித்துள்ளனர்.

நிலைமை மோசமானதால் வேட்பாளர் தேர்வு கூட்டத்தை ராகுல் காந்தியே நடத்த முடிவு செய்தார். அதன்படி ஏப்ரல் 1 ல் ,மதியம் அந்த கூட்டம் நடத்த முடிவு செய்யப்பட்டிருந்தது. இதற்கிடையில், சத்தியமூர்த்தி பவனில் போராட்டங்கள் வெடித்தன. தமிழ்நாடு சேவா தள காங்கிரஸ் தலைவர் குங்ஃபூ விஜயனுக்கு வாய்ப்பு கோரி அவரின் ஆதரவாளர்கள் போராட்டம் நடத்தினர். இதேபோல் மகிளா காங்கிரஸ் மாநிலத் தலைவர் ஹசினா சையத்திற்கு வாய்ப்பு வழங்கக் கோரி திருவள்ளூர் மாவட்ட நிர்வாகிகள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அப்போது திருச்சி மாவட்ட சேவாதள தலைவர் லெட்சுமி என்பவர் திடீரென தீக்குளிக்க முயன்றார். சக நிர்வாகிகள் அவரை தடுத்ததால் அசம்பாவிதம் தவிர்க்கப்பட்டது. இது அங்கிருந்தவர்களிடையே பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. மாலையில் மீனவர் பிரிவு காங்கிரசாரும் தங்கள் பங்கிற்கு ஆர்ப்பாட்டத்தில் குதித்தனர். இவ்வாறான தொடர் குழப்பங்களால் டெல்லியில் நேற்று நடக்க இருந்த ஆலோசனைக் கூட்டம் தள்ளிப்போனது.

இந்நிலையில், தமிழ்நாடு காங்கிரஸ் தேர்தல் மேலாண்மை மற்றும் ஒருங்கிணைப்பு குழுத் தலைவரான மாணிக்கம் தாகூர், தனது பதவியை ராஜினாமா செய்து தேசியத் தலைவர் மல்லிகார்ஜுன கார்கேவுக்கு கடிதம் அனுப்பியுள்ளார். இதனால் காங்கிரஸில் உச்சக்கட்ட பரபரப்பு ஏற்பட்டிருக்கிறது. ஏப்ரல் 2ல்,மீண்டும் டெல்லியில் வேட்பாளர் தேர்வு தொடர்பான கூட்டம் நடைபெறும் என கூறப்படுகிறது. இதில் எடுக்கப்படும் முடிவுகளைப் பொறுத்தே அடுத்தகட்ட நகர்வுகள் அமையும் எனத் தெரிகிறது. இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

## வேட்புமனு தாக்கலுக்கு இன்னும் 2 நாட்களே உள்ளன: காங்கிரஸ், பா.ஜ.க. வேட்பாளர்கள் தேர்வில் என்ன பிரச்சினை..?



சென்னை, ஏப். 02–

தமிழகத்தில் ஏப்ரல் 23–ந் தேதி நடைபெற உள்ள 17–வது சட்டசபை தேர்தலில் 4 முனைப்போட்டி நிலவுகிறது.

**தி.மு.க. – காங்கிரஸ்**

ஆளும் கட்சியான தி.மு.க., 26 கட்சிகளுடன் மெகா கூட்டணி அமைத்துள்ளது. அதில், 13 கட்சிகளுக்கு தேர்தலில் போட்டியிட வாய்ப்பு வழங்கி யுள்ளது. அதிகபட்சமாக, கூட்டணியில் உள்ள தேசிய கட்சியான காங்கிரசுக்கு 28 தொகுதிகளை கொடுத்துள்ளது. இதில், 11 தொகுதிகளில் போட்டியிடும் வேட்பாளர்கள் யார் என அடையாளம் காணப்பட்டுவிட்டாலும், 17 தொகுதிகளில் இழுபறி நிலை நீடிக்கிறது. அதாவது, பொன்னேரி, உதகமண்டலம், ஈரோடு கிழக்கு, சிவகாசி, நாங்குநேரி, குளச்சல், வேளச்சேரி, கவுண்டம்பாளையம், சிங்காநல்லூர், கடலூர், சோளிங்கர், பென்னாகரம், உசிலம்பட்டி, மேலூர் ஆகிய தொகுதிகளில் வேட்பாளர்கள் தேர்வில் கடும் போட்டி நிலவுகிறது.

இந்த தொகுதிகளுக்கான வேட்பாளர்கள் பட்டியலை தமிழக காங்கிரஸ் தலைவர் தயாரித்தாலும், அதற்கு அகில இந்திய காங்கிரஸ் தலைமைதான் ஒப்புதல் அளிக்க வேண்டும். ஆனால், காங்கிரஸ் கட்சியில் ஏற்கனவே பல கோஷ்டிகள் இருப்பதால், அனைத்து தலைவர்களும் டெல்லியில் முகாமிட்டு, தங்களுடைய ஆதரவாளர்களுக்கு சீட் கேட்டு வருகின்றனர்.

அதே நேரத்தில், பணம் பெற்றுக்கொண்டு வேட்பாளர் பட்டியல் தயாரிக்கப்பட்டதாக, கட்சித் தலைவர் ராகுல்காந்திக்கு புகார் சென்றதாகவும், அதனால் அவர் கடும் கோபத்தில் இருப்பதாகவும் கூறப்படுகிறது. இதுபோன்ற சூழ்நிலையில்தான் காங்கிரஸ் கட்சியில் வேட்பாளர்கள் தேர்வில் சிக்கல் நீடித்து வருகிறது.

**அ.தி.மு.க. – பா.ஜ.க.**

தமிழகத்தில் பிரதான எதிர்க்கட்சியான அ.தி.மு.க. கூட்டணியில் பா.ஜ.க. இடம்பெற்றுள்ளது. அந்தக் கட்சிக்கு 27 தொகுதிகள் ஒதுக்கப்பட்டுள்ளன. என்றாலும், பெரும்பாலான தொகுதிகள் விரும்பிய தொகுதிகள் பட்டியலில் இருந்து ஒதுக்கப்படவில்லை என்று பா.ஜ.க. தரப்பில் அதிருப்தி நிலவுகிறது. தமிழக பா.ஜ.க. முன்னாள் தலைவர் அண்ணாமலை, இந்தத் தேர்தலில் கோவை மாவட்டத்தில் உள்ள சிங்காநல்லூர், சூலூர் தொகுதிகளில் ஒன்றில் போட்டியிட விருப்பம் தெரிவித்ததாகவும், ஆனால், அந்த 2 தொகுதிகளையுமே அ.தி.மு.க. எடுத்துக்கொண்டதாகவும் கூறப்படுகிறது.

தற்போது, மொடக்குறிச்சி தொகுதியில் போட்டியிட பா.ஜ.க. தலைமை அண்ணாமலையை வற்புறுத்தினாலும், அவர் தேர்தலில் போட்டியிடவே இல்லை என்று ஒதுங்கிக்கொண்டார். பா.ஜ.க.வுக்கு அ.தி.மு.க. ஒதுக்கிய 27 தொகுதிகளில் 5 தொகுதிகளை மாற்றித்தருமாறு பா.ஜ.க. மேலிட தலைவர்கள் வலியுறுத்தி வருவதாக கூறப்படுகிறது.

ஆனால், அ.தி.மு.க. சார்பில் 165 தொகுதிகளில் போட்டியிடும் வேட்பாளர்கள் பட்டியல் 3 கட்டங்களாக வெளியிடப்பட்டுவிட்டது. ஆனால், பா.ஜ.க. தொகுதிகளை மாற்றிக் கேட்பதால், அ.தி.மு.க. வேட்பாளர்களும் இன்னும் வேட்புமனு தாக்கல் செய்யாமல் உள்ளனர். வேட்புமனு தாக்கலுக்கு வரும் 6–ந் தேதி கடைசி நாள் என்றாலும், இடையே 2 நாட்கள்தான் வேலை நாள். எனவே, அதற்குள் தொகுதிகளை மாற்றிக்கொடுக்க வேண்டிய கட்டாயம் அ.தி.மு.க.வுக்கு இருக்கிறது. ஆனால், மாற்றிக் கொடுக்குமா என்பது கேள்விக்குறிதான். இதுபோன்ற சூழ்நிலையில் தான், தி.மு.க., அ.தி.மு.க. கூட்டணிகளில் இடம்பெற்றுள்ள தேசிய கட்சிகளான காங்கிரஸ், பா.ஜ.க.வில் வேட்பாளர்கள் தேர்வில் தொடர்ந்து இழுபறி நிலை நீடித்துவருகிறது.

## சட்டசபை தேர்தலில் போட்டியிட அண்ணாமலை மறுப்பு: ஆதரவாளர்கள் கடும் அதிர்ச்சி!




சென்னை, ஏப். 02–

பா.ஜ.க. வேட்பாளர்கள் பட்டியலை எந்த நேரத்திலும் கட்சி தலைமை அறிவிக்கும் என எதிர்பார்க்கப்பட்டு வருகிறது. இந்த சூழலில் அந்த வேட்பாளர் பட்டியலில் பா.ஜ.க. முன்னாள் மாநில தலைவர் அண்ணாமலையின் பெயர் இருக்கிறதா? அவர் எந்த தொகுதியில் போட்டியிட இருக்கிறார்? என்ற எதிர்பார்ப்பும் பா.ஜ.க. தொண்டர்கள் மத்தியில் இருந்து வருகிறது. இதனிடையே கட்சி மேலிடம் அவரை மொடக்குறிச்சி தொகுதியில் போட்டியிட வலியுறுத்துவதாகவும், ஆனால் அவர் கோவை வடக்கு தொகுதியில் போட்டியிட விருப்பம் தெரிவிப்பதாகவும் பா.ஜ.க. வட்டாரத்தில் பரபரப்பாக பேசப்பட்டு வருகிறது. இந்த சூழ்நிலையில் பா.ஜ.க. முன்னாள் மாநில தலைவர் அண்ணாமலை நடைபெறவுள்ள சட்டமன்ற தேர்தலில் போட்டியிடவில்லை என்று முடிவு செய்துள்ளதாக பரபரப்பு தகவல்கள் தற்போது வெளியாகி உள்ளன.

மேலும் அவர் பா.ஜ.க. மற்றும் கூட்டணி கட்சி வேட்பாளர்களை ஆதரித்து ‘தீவிர பிரசாரம் செய்வேன்’ என கட்சி மேலிடத்தில் தெரிவித்து விட்டதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. அண்ணாமலையின் இந்த அதிரடி முடிவால், அவரது ஆதரவாளர்கள் கடும் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

## எடப்பாடி பழனிசாமி 16-ந்தேதி கோவையில் ரோடு ஷோ!



சென்னை, ஏப். 02–

அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி சுற்றுப்பயணத்தில் சில மாற்றங்கள் செய்யப்பட்டு, புதிய அட்டவணையை அ.தி.மு.க. தலைமை அலுவலகம் வெளியிட்டுள்ளது. அதன்படி 3–ந் தேதி (நாளை) ஆற்காடுக்கு பதில் வேலூர் என கூட்டம் நடைபெறும் இடம் மாற்றப்பட்டு உள்ளது. மேலும் 5–ந் தேதி நெய்வேலிக்கு பதில் கடலூர், 6–ந் தேதி கெங்கவல்லி சட்டசபை தொகுதி வீரகனூருக்கு பதில் உளுந்தூர்பேட்டை, 7–ந் தேதி உளுந்தூர்பேட்டைக்கு பதில் கெங்கவல்லியிலும் எடப்பாடி பழனிசாமி பிரசாரம் செய்கிறார். மேலும் 15–ந் தேதி கரூர், திருப்பூரில் பிரசாரம் செய்வதாக இருந்தது. ஆனால் இப்போது அன்றைய தினம் எடப்பாடி பழனிசாமி அங்கு பிரசாரம் இல்லை. 16–ந் தேதி மேட்டுப்பாளையம், கோபி செட்டிப்பாளையம் என இருந்தது. ஆனால் இப்போது கோவையில் ரோடு ஷோ, மற்றும் மேட்டுப்பாளையம் மற்றும் திருப்பூர் இடம்பிடித்து உள்ளது. 18–ந் தேதி ஏற்கனவே இருந்த திருச்செங்கோடு. ஈரோடு பகுதிகளுடன் சேர்ந்து கரூரும் இடம் பிடித்துள்ளது. 19–ந் தேதி ஏற்கனவே சேலம் மாவட்டம் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் இப்போது 19–ந் தேதி எந்த பகுதிகளிலும் பிரசாரம் இல்லை.

## வரலாற்றில் முதல் முறை; கம்யூனிஸ்ட் கட்சிகள் களம் காணாத கோவை தேர்தல்!



சென்னை, ஏப். 02–

வரலாற்றில் முதல் முறையாக, கோவையில் கம்யூனிஸ்ட் கட்சிகள் களம் காணாத தேர்தலாக, இந்த சட்டமன்ற தேர்தல் அமைந்துள்ளது.

தொழில் நிறுவனங்களும், தொழிலாளர்களும் மிகுந்த கோவை மாவட்டத்தில் ஒரு காலத்தில் கம்யூனிஸ்ட் கட்சிகளின் ஆதிக்கம் இருந்தது. லோக்சபா தேர்தல், சட்டமன்ற தேர்தல் எதுவாக இருப்பினும், கோவையில் கம்யூனிஸ்ட் கட்சிகளின் குரல் வலுவாக ஒலித்தது. கோவை எம்.பி., தொகுதியில் தொடர்ந்து கம்யூனிஸ்ட் கட்சிகளே போட்டியிட்டு வந்தனர். மாவட்டத்துக்கு உட்பட்ட கோவை கிழக்கு, பேரூர், தொண்டாமுத்தூர், சிங்காநல்லூர், வால்பாறை தொகுதிகளில் கம்யூனிஸ்ட் கட்சியினர் தொடர்ந்து போட்டியிட்டும், வெற்றி பெற்றும் வந்துள்ளனர். பார்வதி கிருஷ்ணன், உமாநாத், ரமணி, பாலதண்டாயுதம் உள்ளிட்ட பல முன்னணி கம்யூனிஸ்ட் தலைவர்கள், கோவையை களமாக கொண்டு அரசியல் செய்தவர்களே.

அப்படி இருந்த கம்யூனிஸ்ட் கட்சிகள், காலப்போக்கில் சிறுத்துப்போனதன் விளைவாக, கோவையில் அவர்களுக்கான முக்கியத்துவமும் குறைந்து விட்டது. மாநிலத்திலேயே ஐந்தே ஐந்து தொகுதிகளை மட்டுமே பெற்றிருக்கும் கம்யூனிஸ்ட் கட்சிகளுக்கு கோவையில் தொகுதிகள் எதுவும் கிடைக்கவில்லை. இதனால், வரலாற்றில் முதல் முறையாக கம்யூனிஸ்ட் கட்சிகள் களம் காணாத தேர்தலாக, இந்த தேர்தல் அமைந்துள்ளது.

இதற்கு, கூட்டணிச் சிக்கல்களை ஒரு காரணமாக கம்யூனிஸ்ட் கட்சியினர் கூறுகின்றனர். வறட்டு சித்தாந்தத்தை தலையில் வைத்துக் கொண்டு ஆடுவதும், தொழிலாளர் மத்தியில் ஏற்பட்டுள்ள விழிப்புணர்வும் தான் கம்யூனிஸ்ட் கட்சிகளின் இந்த வீழ்ச்சிக்கு காரணம் என்கின்றனர், அரசியல் விமர்சகர்கள்.

## விரும்பிய தொகுதிகள் கிடைக்கவில்லை: மைய குழு கூட்டத்தில் கோயல் கோபம்!



சென்னை, ஏப். 02–

சென்னை தி.நகரில், பா.ஜ., மைய குழு கூட்டம், நேற்று முன்தினம் இரவு 7:00 மணிக்கு துவங்கி 10:00 மணி வரை நடந்தது. இதில், மத்திய அமைச்சரும், பா.ஜ., தேர்தல் பொறுப்பாளருமான பீயூஷ் கோயல், தமிழக பா.ஜ., தலைவர் நயினார் நாகேந்திரன் உள்ளிட்ட முக்கிய நிர்வாகிகள் பங்கேற்றனர்.

இக்கூட்டத்தில் பங்கேற்ற பீயூஷ் கோயல் கோபத்துடன் காணப்பட்டார். இதற்கு, தேசிய ஜனநாயக கூட்டணியில் த.வெ.க.,வை சேர்க்க, அவர் மேற்கொண்ட முயற்சி பலன் அளிக்காததே காரணம் என தெரிகிறது.

இது குறித்து கோயல் பேசும் போது, ‘தமிழக தொகுதிகள் நிலவரம் குறித்து, எனக்கும் மேலிட தலைவர்களுக்கும் தெரியாது. இங்குள்ள நிர்வாகிகள் தேர்வு செய்து தந்த தொகுதிகளை தான், அ.தி.மு.க.,விடம் கேட்டோம். அக்கட்சியிடம் 40 தொகுதிகள் கேட்டதற்கு, 27 தான் கிடைத்தன.

‘அந்த தொகுதிகள் குறித்த விபரம் வெளியானதும், ‘வெற்றி வாய்ப்பு இல்லாத தொகுதிகளாகப் பார்த்து கொடுக்கப்பட்டிருக்கின்றன’ என, பலரும் குமுறுகின்றனர்.

‘விசாரித்ததில், ‘கட்சி வெற்றிக்காக தொகுதிகள் வாங்கப்படாமல், தனிநபர்களுக்காக மட்டுமே தொகுதிகள் பெறப்பட்டுள்ளன’ என்பது தெரிய வந்துள்ளது. இனிபேசிபிரயோஜனமில்லை. கிடைக்கும் தொகுதிகளில் வெற்றி பெற்றே ஆக வேண்டும்’ என கூறினார். இவ்வாறு அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

## தொண்டர்கள் புடைசூழ வேட்புமனு தாக்கல் செய்தார் உதயநிதி ஸ்டாலின்



சென்னை, ஏப். 02–

திமுக சார்பில் சேப்பாக்கம்–திருவல்லிக்கேணி தொகுதியில் 2வது முறையாக போட்டியிடும் திமுக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் தொண்டர்கள் புடைசூழ வேட்பு மனுதாக்கல் செய்தார். தேர்தல் நடத்தும் அலுவலர் சுகந்தியிடம் வேட்புமனு தாக்கல் செய்தார்.

உதயநிதியை எதிர்த்து அதிமுக சார்பில் ஆதிராஜாராம், தவெக சார்பில் டி.செல்வம் ஆகியோர் களம் காண்கின்றனர். கடந்த தேர்தலில் சேப்பா க்கம்–திருவல்லிக்கேணி தொகுதியில் 69,355 வாக்குகள் வித்தியாசத்தில் உதயநிதி ஸ்டாலின் வெற்றிபெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.






Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020